மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி

முன்னிலை: திரு.க.யோகேஷ்வரன், B.A.,L.L.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரியாபட்டி.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வெள்ளிகிழமை

புதிய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.283/2025

பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.262/2024

*****

புகார்தாரர்	கவிதா, க/பெ.பத்மநாபன், 3/28, நடுத்தெரு, அரசகுளம், குரண்டி, காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
எதிரி	மணிகண்டன், த/பெ.மார்நாடு, 2/1, தெற்கு தெரு, மாங்குளம் கிராமம், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 & 142
காசோலை (000002)	04.02.2024
காசோலை தொகை	Rs.20,00,000/-
காசோலை திரும்பிய நாள்	06.02.2024
காசோலை திரும்பிய காரணம்	(Funds Insufficient)
அறிவிப்பு அனுப்பிய நாள்	10.02.2024
எதிரி அறிவிப்பு பெற்றுக்கொண்ட நாள்	12.02.2024
வழக்கு தாக்கல் நாள்	22.03.2024
வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்	24.05.2024

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

புகார்தாரர் வழக்கறிஞர்	திரு. R.வினோத்குமார்
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.P. அர்ஜுணன்
தீர்மானம்	எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம்பிரிவு 138–ன்கீழ் குற்றவாளி என்று கு.வி.மு.ச பிரிவு255(2)/ 278(2) BNSS–ன் கீழ் தீர்மானிக்கப்பட்டது.

இரு தரப்பும் கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

தீர்ப்புரை

1. புகார்தாரர் வழக்கு சுருக்கம்:

இவ்வழக்கின் எதிரி மாங்குளம் கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்ததாகவும், அதனடிப்படையில் புகார்தாரருக்கும், எதிரிக்கும் நட்பு ஏற்பட்டு, எதிரி புகார்தாரரிடம் நல்ல முறையில் பழகி வந்ததாகவும், அந்த பழக்க வழக்கத்தின் அடிப்படையில் புகார்தாரர் கடந்த 02.01.2024 ம் தேதியன்று எதிரி தனது சொந்த தேவைக்காக உடனடியாக ரூ.20,00,000/– கைமாற்றுக்கடனாக வேண்டும் என்றும், எதிரி தனிநபர் லோன் போட்டிருப்பதாகவும், ஒரு மாதத்தில் பணம் வந்துவிடும் என்றும், லோன் வந்தவுடனேயே மேற்படி ரூ.20,00,000/–த்தை புகார்தாரரிடம் திருப்பி கொடுத்துவிடுவதாகவும் எதிரி உறுதியளித்துள்ளார். புகார்தாரரும், எதிரியின் மீது வைத்திருந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர் விசேஷம் வைத்து கைவசம் வைத்திருந்த செய்முறைத்தொகை மற்றும் கையிருப்பு பணம் ஆகியவற்றின் மூலமாக ரூ.20,00,000/– த்தை கடந்த 04.01.2024 ம் தேதியன்று புகார்தாரர் தனது வீட்டில் வைத்து எதிரியிடம் கொடுத்துள்ளார். எதிரியும் மேற்படி தொகையை பெற்றுக்கொண்டு, அன்றைய தேதியான 04.01.2024 ம் தேதியன்று எதிரி தான் வங்கிக் கணக்கு வைத்துள்ள விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணர் கிளை, Esaf Small Finance வங்கியின் காசோலை எண்.000002 ல் 04.02.2024 ம் என்ற பின் தேதியிட்டு ரூ.20,00,000/– த்திற்கு பூர்த்தி செய்து, எதிரியின் கையொப்பமிட்டு புகார்தாரரின் பெயருக்கு மேற்படி

காசோலையை புகார்தாரரிடம் கொடுத்து 05.02.2024 ம் தேதியன்று வங்கியில் வசூலுக்கு செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு எதிரி புகார்தாரரிடம் உறுதியளித்துள்ளார். புகார்தாரர் மேற்படி காசோலையை கடந்த 05.02.2024 ம் தேதி புகார்தாரர் வங்கி கணக்கு உள்ள காரியாபட்டி கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் வங்கியில் வசூலுக்கு செலுத்தியுள்ளார். ஆனால் எதிரி கொடுத்த மேற்படி காசோலையானது வங்கியில் வசூலாகாமல் (Funds Insufficient) போதுமான இருப்புத் தொகை இல்லை என 06.02.2024 ம் தேதியன்று காசோலை திரும்பி வந்துவிட்டதாகவும், புகார்தாரர் காசோலை திருப்பப்பட்டது குறித்து கடந்த 10.02.2024 ம் தேதி எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை எதிரி 12.02.2024 ம் தேதி பெற்றுக்கொண்டு எந்த ஒரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142 ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 204(3)/ 227(3) BNSS ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் குற்றம் சாட்டப்பட்ட நபரிடம் கு.வி.மு.ச. பிரிவு 251/274 BNSS–ன் படி குற்றத்தின் சாராம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் குற்றச்சாட்டு " என்றும் எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:

ம.சா.1 சாட்சியாக புகார்தாரர் கவிதா விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம்

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் தரப்பில் மனோஜ் (பேங்க் கிளை மேலாளர்) – ம.சா.2 ஆகவும், வெங்கடேஷ்குமார் (கிளை மேலாளர்) ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யவில்லை.

5. பிரிவு 313(1)(பி) வினா மற்றும் பதில்:

எதிரியிடம் பிரிவு 313(1)(பி) குவிமுச–வின் கீழ் வினவியபோது, பொய் குற்றச்சாட்டு என்று கூறியுள்ளார்.

6.எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:

மேலும் எதிரி தரப்பில் மனோஜ் (பேங்க் கிளை மேலாளர்) – எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி மணிகண்டன் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யவில்லை.

7.புகார்தாரர் தரப்பு வாதம்:

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்திலும், புகார்தாரர் சாட்சியத்திலும், புகார்தாரர் தரப்பில் முன்னிலை படுத்தப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலம் எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆன காசோலையானது எதிரியின் காசோலை தான் என்றும், எதிரி வாங்கிய கடனுக்கு ஆதரவாக காசோலை வழங்கப்பட்டது என்றும், காசோலையை குறித்து எதிரி தரப்பில் எவ்வித முரண்பாட்டையும் ஏற்படுத்தவில்லை என்றும், காசோலையில் உள்ள கையொப்பம் எதிரினுடைய கையொப்பம் இல்லை என்று மறுக்கப்படவில்லை என்றும், மாற்று முறை ஆவணச்சட்ட பிரிவு 118 மற்றும் பிரிவு 139 படி சட்டப்படியான அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது என்றும், எனவே எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்; 1). புகார்தாரர்

எதிரி மீது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் சுமத்தியுள்ள குற்றமானது இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2).ஆம் எனில் அவருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன என்பதே ஆகும்.

9. எதிரி தரப்பு வாதம்:

9(1). எதிரி தரப்பில் புகார்தாரரிடம் இருந்து காசோலைக்கு உண்டான தொகையை வாங்கவில்லை என்றும், எதிரி 2019-2025 ஆண்டுகள் வரை மாங்குளம் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றும், அப்போது பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலை பார்க்கும் நபர்களுக்கு அவர்கள் செய்த வேலைக்காக காசோலைகளை கொடுக்கும் வழக்கம் உண்டு என்றும், அதை போல் சுமார் 4, 5 காசோலைகளை வேலை பார்க்கும் நபர்களுக்கு கொடுத்தார் என்றும், ரூ.20 லட்சம் தொகையை கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் ஏற்பட்ட அலுவலக சண்டையை மனதில் வைத்துக்கொண்டு பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வேலைக்காக கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து எதிரியின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று வாதம் எடுத்துரைத்தார்.

9(2). சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. தீர்வு :

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருந்தால் மட்டுமே எதிரியின் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும். மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் உட்கூறுகள் பின்வருமாறு :

"(i) a person must have drawn a cheque on an account maintained by him in a bank for

payment of certain amount of money to another person from out of that account for the discharge of any debt or other liability;

(ii) that cheque has been presented to the bank within a period of three months from the date on which it is drawn or within the period its validity whichever is earlier;

(iii) that cheque is returned by the bank unpaid, either because the amount of money standing to the credit of the account is insufficient to honour the cheque or that it exceeds the amount arranged to be paid from that account by an agreement made with the bank

(iv) the payee or the holder in due course of the cheque makes a demand for the payment of the said amount of money by giving a notice in writing, to the drawer of the cheque, within 30 days of the receipt of information by him from the bank regarding the return of the cheque as unpaid;

(v) the drawer of such cheque fails to make payment of the said amount of money to the payee or the holder in due course of the cheque within 15 days of the receipt of the said notice".

10.(1). புகார்தாரர் தரப்பில் எதிரி மீதான முதலாவது உட்கூறு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கையில் புகார்தாரரிடம் எதிரி காசோலை எண்.000002 ஐ 04.02.2024 ம் தேதியிட்ட ரூ.20,00,000/- க்கு கொடுத்துள்ளார். எதிரியும் காசோலையில் உள்ளது தனது பெயரையும், தனது கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் காசோலையாக உள்ள ஆவணம் தனது வங்கி கிளையில் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் என்று எதிரி தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் எதிரி நீதிமன்றத்திலிருந்து காசோலையானது புகார்தாரருக்கு கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா என்று கேட்ட போது அவர் மேற்படி காசோலையை கடனுக்காக தான் கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் அவர் கடனை செலுத்திவிட்டதாகவும் கூறியுள்ளார். எனவே முதலாவது உட்கூறான காசோலையை எதிரி சட்டப்படியான கடனை தீர்ப்பதற்கு புகார்தாரரிடம் கொடுத்திருப்பது தெரிய வருகிறது.

10.(2).மேற்படி காசோலையை புகார்தாரர் வங்கி கணக்கு வைத்துள்ள ஆவியூர் கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் காசோலையை வசூலுக்கு செலுத்த சென்ற போது மேற்படி வங்கி பணியாளர் காசோலையை காரியாபட்டி கிளை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் செலுத்த சொன்னதின் பேரில் புகார்தாரர்

05.02.2024 தேதி வசூலுக்கு அனுப்பியதில் எதிரி வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை (Funds Insufficient) என்ற வங்கி குறிப்புடன் காசோலை 06.02.2024 ம் தேதி திருப்பபட்டு திரும்ப வந்துள்ளது. காசோலை திரும்பியது குறித்து 10.02.2024–ம் தேதியன்று ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.(3).அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு 12.02.2024 ம் தேதி பெற்றுக்கொண்டு எதிரி இது நாள் வரை காசோலைக்களுக்குரிய தொகையையோ, பதில் அறிவிப்போ கொடுக்கவில்லை.

10. (4).	காசோலை தேதி	–	04.02.2024
	வசூலுக்கு தாக்கல் செய்த தேதி	–	05.02.2024
	காசோலை திரும்பிய தேதி	–	06.02.2024
	வழக்கறிஞர் அறிவிப்பு தேதி	–	10.02.2024
	எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்ட தேதி	–	12.02.2024

10. (5). புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட தேதியான 12.02.2024–ம் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் எதிரி காசோலை தொகையை திருப்பி செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் குறிப்பிட்ட பதினைந்து நாட்களுக்குள் எதிரி காசோலை தொகையை திருப்பிச் செலுத்த தவறியதால் புகார்தாரரால் இவ்வழக்கானது 22.03.2024–ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11). மேற்கண்ட 5 உட்கூறுகள் புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டிருந்தால் மட்டுமே எதிரியின் மீதான குற்றமானது மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138ன் கீழ் முதல்நிலை கோட்பாடு (Initial Burden) நிரூபிக்கப்பட்டதாகும். எதிரி புகார்தாரரிடம் காசோலையான **ம.சா.ஆ.1** யை 04.02.2024 –ம் தேதியிட்ட ரூபாய் 20,00,000/– த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். மேற்படி வழக்கு காசோலையான

ம.சா.ஆ.1–ஐ புகார்தாரர் தனது வங்கி கணக்கில் 05.02.2024 ம் தேதி செலுத்தியபொழுது எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை 06.02.2024 ம் தேதியன்று திருப்பப்பட்டதாக வங்கி குறிப்பாணை **ம.சா.ஆ.2** யை தாக்கல் செய்யப்பட்டது. அதன் பின்னர் புகார்தாரர் 10.02.2024–ம் தேதியன்று எதிரிக்கு சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** அனுப்பியுள்ளார். மேற்படி சட்ட அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ரசீது **ம.சா.ஆ.4** மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.5** ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை வைத்து பார்க்கும் போதும், நாம் முன்னர் கூறிய வாதங்களின் அடிப்படையிலும், புகார்தாரர் தன் மீதுள்ள முதல்நிலை கோட்பாடு (Initial Burden) நிரூபித்துவிட்டார்.

12). எதிரி தரப்பு வழக்கறிஞர் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கொடுப்பதற்கு புகார்தாரருக்கு வருமானம் இல்லை என்றும், வருமானம் இல்லாத காரணத்தினால் புகார்தாரரால் எதிரிக்கு ரூ.20 லட்சம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றும் வாதம் முன்வைத்துள்ளார். ஆனால் புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனது மகளுக்கு பூப்புனித நீராட்டு விசேஷம் வைத்து அதன் மூலம் வந்த செய்முறை பணத்தையும், மீதி பணம் புகார்தாரர் சம்பாதித்து சேமித்து வைத்திருந்த தொகையும் சேர்த்து கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். பொதுவாக கிராமங்களில் விசேஷம் வைக்கும் போது மொய் தொகை அதிகமாக வந்திருக்க வாய்புள்ளது என்று ஒரு கருத்தும் எழுகிறது. எனவே புகார்தாரர் அவரது மகளுக்கு விசேஷம் வைத்து அதில் வந்த மொய் பணத்திலிருந்து தொகையை கொடுத்திருக்க வாய்ப்பு உண்டு என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13). மேலும் ம.சா.2 மனோஜ் (கிளை மேலாளர்) அவரது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை தங்கள் கிளை வங்கியில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை என்றால் சரிதான் என்றும், ம.சா.ஆ.1 காசோலையில் ரூ.20 லட்சத்திற்கு தொகை நிரப்பப்பட்டுள்ளது என்றும், ம.சா.3 வெங்கடேஷ் (கிளை மேலாளர்) அவரது சாட்சியத்தில் ம.சா.ஆ.1 காசோலை தங்கள் கிளையின் காசோலை

என்றால் சரிதான் என்றும், தங்கள் வங்கியில் எந்த நபர்கள் வங்கி கணக்கு வைத்துள்ளார்களோ அவர்களுக்கு மட்டும் தான் காசோலை வழங்குவோம் என்றால் சரிதான் என்றும், ம.சா.ஆ.1 காசோலையில் ரூ.20 லட்சத்திற்கு தொகை நிரப்பப்பட்டு அதில் மணிகண்டன் மார்நாடு என்று உள்ளது என்றால் சரிதான் என்று புகார்தாரரின் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

14). மேலும் **ம.சா.ஆ.2** பரிசீலனை செய்கையில் எதிரி கொடுத்த காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கில் செலுத்தியபொழுது 06.02.2024 ம் தேதி எதிரி வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டதாக தெரிய வருகிறது. மேலும் ம.சா.2 அவரது சாட்சியத்தில் புகார்தாரர் தங்கள் வங்கியில் ம.சா.ஆ.1 காசோலையை தாக்கல் செய்த போது (Funds Insufficient) என்று திருப்பப்பட்டது என்று ம.சா.ஆ.2 ஆவணத்தை ஒத்துரைத்து கூறியுள்ளார்.

15). மேலும் புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் காலதாமதம் எதுவும் இல்லை. இவ்வழக்கில் குற்றச்சாட்டப்பட்ட நபர் முதன் முதலாக இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி கு.வி.மு.ச. பிரிவு 251/ 274 BNSS ன் கீழ் வழக்கு குறித்து வினவியபோது பொய் வழக்கு என்று மட்டும் மறுத்துள்ளார். அதே சமயம் எதிரி அவரது சாட்சியத்தில் காசோலையில் உள்ள கையெழுத்தையும், தனது பெயரையும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. எனவே, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றம் குறித்து எதிரி தான் பிரிவு 139 ன் கீழ் தன்னுடைய எதிர்வாதத்தினை தக்க சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபித்திருக்க வேண்டும்.

16). அவ்வாறு பார்க்கையில் எதிரி தரப்பில் மனோஜ் (கிளை மேலாளர்) எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 01.01.2021 ம் ஆண்டு முதல் 31.12.2025 ம் ஆண்டு வரையிலான புகார்தாரரின் Account Statement ஐ எ.ம.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் புகார்தாரர் அவரது சாட்சியத்தில் அவரது மகளுக்கு விஷேசம் வைத்து அதில் வந்த மொய் பணத்தை தான் கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். எனவே எ.ம.சா.1 ன் சாட்சியமானது எதிரி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு போதுமானதாக அமையவில்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

17). மேலும் எதிரி அவரது சாட்சியத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலை பார்க்கும் நபர்களுக்கு அவர்கள் செய்த வேலைக்காக காசோலைகளை கொடுக்கும் வழக்கம் உண்டு என்றும், அதை போல் சுமார் 4, 5 காசோலைகளை வேலை பார்க்கும் நபர்களுக்கு கொடுத்தேன் என்றும், தான் Esaf Bank ல் தனது பெயரில் உள்ள வங்கி கணக்கிலிருந்து மேற்படி காசோலையை தருவேன் என்றும், வேறு நபர்களுக்கு வேலை சம்மந்தமாக கொடுத்த 2 காசோலைகள் அந்த நபர்கள் திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றும், ஒரு காசோலை மட்டும் திருப்பி கொடுக்கப்படவில்லை என்றும், அது போல் காசோலை எண்.000002 என்ற காசோலை தற்போது வரை திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்றும், மேற்படி காசோலை எண்.000002 என்ற காசோலை என்ன ஆனது என்பதை பற்றி தான் தெரிந்து கொள்ளவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18). மேலும் நீதிமன்றத்திலிருந்து எதிரியிடம் நீதிமன்ற கேள்வியாக – "ஏன் யூனியன் ஆபிசில் வேலை பார்க்கும் நபர்களுக்கு பஞ்சாயத்து ஆபிஸ் அல்லது யூனியன் ஆபிசிஸ் வங்கி கணக்கு அல்லாமல் எதற்காக என் பெயரில் உள்ள வங்கி கணக்கு காசோலையை கொடுத்தேன்" என்று கேட்டபோது அதற்கு எதிரி அவர்கள் செக்யூரிட்டியாக மேற்படி காசோலையை கேட்பார்கள் தான் அவர்களிடம் கொடுப்பேன் என்று பதில் கூறியுள்ளார். மேலும் " ஒரு காசோலை மட்டும் திரும்பி தரப்படவில்லை என்பதனால் தான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா" என்றால் புகார் எதுவும் அளிக்கவில்லை என்று பதில் கூறியுள்ளார். எந்த காரணத்திற்காக யூனியன் ஆபிசில் நடக்கும் வேலைகளுக்கு எதிரி தனது சொந்த வங்கி கணக்கிலிருந்து (Personal Account) மூலம் காசோலை கொடுத்தார் என்பதற்கு எதிரி அளித்துள்ள பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும் யூனியன் ஆபிசில் வேலை பார்த்தால் அதற்குரிய பில்களை முறையாக அரசாங்க கணக்கிலிருந்து தான் பெற இயலும். மேலும் ஒரு காசோலை மட்டும் திரும்பி வராமல் இருந்த போது எதற்காக காவல் நிலையத்தில் எதிரியானவர் புகார் மனு அளிக்கவில்லை என்பதற்கு எவ்வித விளக்கமும் எதிரி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. எனவே மேலே கூறிய விவாதங்களின் அடிப்படையில் எதிரியானவர் வெறுமென ஒரு வாதத்திற்காக மட்டும் யூனியன்

ஆபிசில் வேலை பார்த்த நபர்களுக்கு மேற்படி காசோலையை கொடுத்ததாக வாதம் எடுத்துரைத்தார்.

19). மேலும் இந்த நீதிமன்றமானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Sanjabij Tari vs. Kishore S. Borcar & Anr 2025 INSC 1158** என்ற வழக்கில் வழங்கிய முன் தீர்ப்பின் படியும், மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் **ROC.No.101368-A/2025/F 1** ன் படியும் கீழ்கண்ட கேள்விகள் எதிரியிடம் கேட்கப்பட்டது:

1. கேள்வி – காசோலை உங்கள் வங்கி கணக்கிற்கு சொந்தமானது என்பதை ஒப்புக்கொள்கிறீர்காளா?

பதில் – ஒப்புக்கொள்கிறேன்.

2. கேள்வி – காசோலையில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்காளா?

பதில் – என்னுடைய கையொப்பம் தான்.

3. புகார்தாரருக்கு இந்தக் காசோலையை நீங்கள் வழங்கினீர்களா/ அனுப்பினீர்களா?

பதில் – நான் தான் வழங்கினேன்.

4.கேள்வி– புகார்தாரரின் புகாருக்கு நீங்கள் பொறுப்புக்கூற வேண்டியிருப்பதை ஒப்புக்கொள்கிறீர்காளா?

பதில் – நான் கொடுக்க வேண்டிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன்.

5. கேள்வி– புகார்தாரருக்கு நீங்கள் காசோலையை வழங்கிய போது புகார்தாரருக்கு நீங்கள் சட்டப்படியான கடனைக் கொடுக்க கடமைப்பட்டு இருந்தீர்களா?

பதில் – பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன்.

6. கேள்வி – இந்த கட்டத்தில் வழக்கை சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறீர்களா?

பதில் – சமரசம் வேண்டாம்.

எனவே மேலே கூறிய எதிரியின் பதிலிருந்து எதிரியானவர் புகார்தாரருக்கு தான் பெற்ற கடனுக்காக காசோலை கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதே சமயம் எதிரியானவர் தான் புகார்தாரருக்கு மேற்படி கடனை தீர்த்துவிட்டதாக

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

கூறியுள்ளார். ஆனால் எதிரியானவர் புகார்தாரருக்கு கடனை திருப்பி செலுத்திவிட்டதற்கான எந்தவித ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

20). இந்த வழக்கின் தன்மையையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்பொழுதும் எதிரி புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.20,00,000/-க்கு காசோலை எழுதிக் கொடுத்துள்ளார் என்பதையும், அந்த காசோலையை புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்தபொழுது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை (Insufficient Funds) என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது என்பதையும், அதனை குறிப்பிட்டு புகார்தாரர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதையும், அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும், எதிரி நாளது தேதி வரை காசோலைக்கு உண்டான தொகையினை புகார்தாரருக்கு திருப்பி செலுத்தப்படவில்லை என்பதையும் புகார்தாரர் நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

21). மேலும் எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்ற விவரத்தை எதிரி நன்கு தெரிந்துகொண்டே புகார்தாரருக்கு காசோலைகள் கொடுத்து மோசடி செய்துள்ளார். மேலும் எதிரி புகார்தாரருக்கு திரும்ப செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தியதற்கு ஆவணங்கள் எதையும் முன்னிலைப்படுத்தாததால் எதிரி தன் மீதான மெய்பிக்கும் சுமையை சட்டப்படி நிரூபணம் செய்யவில்லை. அதனால் எதிரி சட்டப்படியான கடனை புகார்தாரருக்கு திரும்ப செலுத்தாமல் இருந்துள்ளார் என்பதை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

22). எனவே, எதிரியை பிரிவு 138 மாற்று முறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரிக்கு மேற்படி பிரிவின் கீழ் வழங்கக்கூடிய தண்டனை பற்றி வினவியபோது,

" குறைந்தபட்ச தண்டனை கொடுங்கள் " என்று கூறினார்.

ஆகவே, எதிரியின் வேண்டுகோளை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் கீழ்கண்டவாறு தண்டனை வழங்கப்படுகிறது.

23.முடிவு

முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்று முறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24.தண்டனை

முடிவாக, எதிரி மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்யப்படுகிறது. மேலும் எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று கு.வி.மு.ச பிரிவு 255(2)/ 278(2) BNSS–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

25.குவிமுச பிரிவு 357(3)/ 395(3) BNSS –ன் கீழ் இழப்பீடு

எதிரி ரூபாய் 40,00,000/–த்தை புகார்தாருக்கு 30 நாட்களுக்குள் கு.வி.மு.ச பிரிவு 357(3) / 395(3) BNSS ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாத காலம், மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் வருடம் ஜூலை மாதம் 31ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

YOGESHWARAN G

Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

<u>1.புகார்தாரர் தரப்பு சாட்சிகள்</u>

1. ம.சா.1 – கவிதா (புகார்தாரர்)

2. ம.சா.2 – மனோஜ் (பேங்க் கிளை மேலாளர்)

3. ம.சா.2 – வெங்கடேஷ்குமார் (பேங்க் கிளை மேலாளர்)

<u>2. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

1.	ம.சா.ஆ. 1	04.02.2024 ம் தேதியிட்ட ரூ.20,00,000/- க்குரிய Esaf Bank, மல்லாங்கிணர் வங்கி காசோலை எண். 000002
2.	ம.சா.ஆ. 2	06.02.2024 ம் தேதியிட்ட காரியாபட்டி ஸ்டேட் பேங் ஆப் இந்தியா வங்கி கிளையால் போதுமான பணம் இல்லை என்ற காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை
3.	ம.சா.ஆ. 3	காசோலை திரும்பியது குறித்து 10.02.2024 ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்
4.	ம.சா.ஆ. 4	புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பிற்கான அஞ்சல ரசீதின் அசல்
5.	ம.சா.ஆ. 5	புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்

<u>3. எதிரி தரப்பு சாட்சிகள்,</u>

1. எ.ம.சா.1 – மனோஜ் (கிளை மேலாளர்)

2. எ.ம.சா.2 – மணிகண்டன்

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>

1.	எ.ம.சா.ஆ. 1	01.01.2021 ம் ஆண்டு முதல் 31.12.2025 ம் ஆண்டு வரையிலான புகார்தாரரின் Account Statement

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

குறிப்பு :

1. வழக்கின் தீர்ப்பு பற்றிய விபரம் தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் மூன்று வாய்தாவிற்குமேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.